வசதியும் இருக்கிறது. மேலும், சிதம்பரம் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையிலே, 4,000 இருக்கைகள் இருக்கின்றன. அதனால் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் இந்தக் கல்லூரியிலேயே நல்லமுறையிலே படிப்பதற்கான வசதியிருக்கிறது. இந்த ஆண்டுகூட அரசுக் கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்க்கை அதிகம் இருப்பின், 10 சதவிகித இருக்கைகள்கூட அதிகமாகப் பெறுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே, போதுமான இடங்கள் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலே கல்லூரி தொடங்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 429, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

429—

நியாய விலைக் கடை

***22114—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், வெள்ளையூர் காலனி பகுதிக்குத் தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியத்தில் உள்ள வெள்ளையூர் தொடக்க

வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 752 குடும்ப அட்டைகளுடன் வெள்ளையூர் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடையைச் சேர்ந்த வெள்ளையூர் காலனி பகுதியில், 114 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசின் நெறிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில், வெள்ளையூர் காலனி பகுதிக்கென தனியாக ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளையூர் காலனி பகுதிக்கென தனியாக நியாய விலைக் கடை அமைத்துக் கொடுத்தால், அப்பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெறுவார்கள். எனவே, நியாய விலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தோற்றுவிக்கப்படக்கூடிய பகுதி நேரக் கடையானது, தாய்க் கடையிலிருந்து 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். ஆனால், 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள்தான் இருக்கிறது. அந்த விதி பூர்த்தியாகவில்லை. பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமானால், 150 கார்டுகள் இருக்க வேண்டும். அதுதான் அரசு விதி. ஆனால், 114 கார்டுகள் மட்டுமே இருக்கின்றன. எனவே, மேற்கண்ட அரசினுடைய விதிகள் பூர்த்தியாகாதபோதிலும், ஆதி திராவிடர் பகுதியாக இருப்பதனால், முன்னுரிமை கொடுத்து, அங்கு பகுதி நேரக் கடை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்தக் கருத்தினை ஏற்று, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு துறைரீதியாகப் பரிசீலிக்கப்படும் என மாண்புமிகு

2013 மே 8]

பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதியில் சுமார் 500 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி, அவர்கள் ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு 1 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் வாங்க வேண்டும். அதேபோன்று, புதிதாக குடும்ப அட்டை கேட்டு, பலர் மனு செய்துள்ளார்கள். ஏற்கெனவே பயன்பாட்டில் 114 குடும்ப அட்டைகள் உள்ளன. இதனைக் கணக்கில் கொண்டு, வெள்ளையூர் காலனி மக்களுக்குத் தனியாக நியாய விலைக் கடை அமைத்துக் கொடுத்தால், அப்பகுதி மக்கள் பயன்பெறுவார்கள். அப்பகுதி மக்களின் சிரமத்தைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, நியாய விலைக் கடைகள்மூலமாக அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற பொருட்கள், உரியவர்களுக்கு தங்குதடையின்றிக் கிடைப்பதில் எந்தவிதமான இடையூறும் இருக்கக்கூடாது என்று பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அந்த வகையில், தற்போது மலைவாழ் மக்களுக்காக 100 நகரும் கடைகள் அமைப்பதற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள்.*

ஒரு பகுதி நேரக் கடை அமைய வேண்டுமென்றால், அக்கடையில் குறைந்தபட்சம் 150 அட்டைகள் இருக்க வேண்டும் என்பதும், தாய்க் கடையிலிருந்து 150 அட்டைகளைப் பிரித்த பிறகு, தாய்க் கடையில் 500 அட்டைகள் இருக்க வேண்டும் என்பதும், தாய்க் கடையிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர்

தூரத்தில் இருக்க வேண்டும் என்பதும் அரசினுடைய விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அந்தப் பகுதியில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருப்பதனால், முன்னுரிமை கொடுத்து அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். ஏற்கெனவே ஒரு கடை மட்டுமே சங்கத்தால் நடத்தப்படுவதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மற்றொரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்காக, துறைரீதியாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்க உறுதியாகப் பரிசீலிக்கும் என மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை 64—வது வார்டு, கீரத்துறை, மூக்கன் நாடார் சந்தில் வாடகைக் கட்டடத்தில் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, 2011–2012 ஆம் ஆண்டில், இந்தக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. அந்த இடத்தில் இதுவரையிலும் நியாய விலைக் கடை கட்டப்படவில்லை. அதுபோல் மதுரை 74—வது வார்டு, மஹால் 5 மற்றும் 6 ஆகிய தெருக்களில் செயல்பட்டுவரும் இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு, 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்று வரையிலும் நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடங்கள் கட்டப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்களைக் காலத்தே கட்ட ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரை அவர்கள் கேட்டிருக்கின்ற நியாய விலைக் கடை, மதுரை

2013 மே 8]

மாநகராட்சிப் பகுதிக்கு உள்ளடங்கிய பகுதியாகும். மாநகராட்சிப் பகுதியில் நியாய விலைக் கடை அமைய வேண்டுமானால், நியாய விலைக் கடை அமைப்பதற்கான இடத்தை இலவசமாகக் கொடுப்பதற்கு மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெறவேண்டும். இதுதான் நடைமுறை. அதன்பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிற நிதியினை நிச்சயமாகப் பயன்படுத்தி கட்டடம் கட்டுவதற்குத் துறைரீதியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, எஸ்.எஸ்.புரம் கிராமத்திலிருந்து ரெங்கநாதபுரம் கிராமத்திற்கு ரேஷன் பொருட்கள் வாங்கவேண்டுமென்றால், 5 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டியுள்ளது. ரெங்கநாதபுரம் கிராமத்தில் மொத்தம் 140 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கின்றன. 150 குடும்ப அட்டைகள் இருந்தால்தான், பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். மலைப் பிரதேசங்களில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற நியாய விலைக் கடைகளுக்கெல்லாம் சட்டத்தை இலகுவாக்கி, பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஏற்படுத்திக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும். இதனை அரசு செய்ய முன்வருமா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுபா அவர்களுக்குக் கூறிய பதிலைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ரேஷன் பொருட்கள் அரசாங்கத்தால் ஏறத்தாழ ரூ.4,900 கோடி செலவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை எந்த அரசும் வழங்காத

அளவிற்கு, ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வீதம் 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்குகிற ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்மூலமாகவும் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 140 குடும்ப அட்டைகளுடன் தாய்க் கடையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கடையினுடைய முக்கியத்துவம், அந்தப் பகுதி மக்களுடைய முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுப்பதற்குப் பரிசீலிக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 430, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

430—

வன உயிரியல் பூங்கா

***28550—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணைப் பகுதியில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,